1990 மே 11]

துறை அலுவலர்கள் ஒரு வார காலமாகப் போராடுவதை நிறுத்வதற்காக இந்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இங்கே மூலக் கேள்வி அத்தியாவசியப் பொருள்களைப் பற்றியது. துணைக் கேள்வி வேறு எங்கோ செல்கிறது. அவர்கள், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. குருநாதன் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தபடி அந்த பாரஸ்டினுடைய உண்ணா விரதத்தை அவர்களே முடித்துக் கொள்ளவிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரயில்வே சுரங்கப் பாதைப் பணி.

*9365—திரு. சா. கணேசன் :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா :

(அ) தியாகராய நகர் தொகுதியில் உள்ள மாம்பலம் இரயில்வே சுரங்கப் பாதைப் பணி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பணியை மீண்டும் தொடர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். தெரியும்.

(ஆ) அப்பணியை மீண்டும் தொடர நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை தியாகராயர் நகரையும் மேற்கு மாம் பலத்தையும் இணைக்கின்ற வகையில் மேட்லி தெரு, ஈஸ்வரன் கோவில்தெரு இடையில் இணைக்கும் இரயில்வே சுரங்கப் பாதை அமைப்பது மூலமாக போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க வாய்ப் பாக இருப்பதால் விரைவாகப் பணியினை மேற்கொள்ள அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணி ஆரம்பக் காலத்தில்துவங்குவதற்கு, நிலம் கையகப்படுத்துவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம்

9-25 மணி

உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து தடையாணை பிறப்பிக்கப்பட்டது. இப்போது அது ரத்து செய்யப்பட்டு இருக்கிறது. நிலத்தை கையகப்படுத்துவதற்கான தனி அதிகாரி நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. விரைவாக அந்தப் பணியைத் துவங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்தப்பணி விரைவாகத் துவங்கப்படும்.

திரு. சா. கணேசன் : தலைவர் அவர்களே, நிலத்தைக் கையகப்படுத்தும் திட்டம் கூட முடிவான வகையில் அவார்டு பாஸ் செய்யப்பட்டிருப்பதாக அறிகிறேன். எனவே, விரைவில் தொடர்ந்து பணியினை முடிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, ஏறத்தாழ 10 பணிகள் அவார்டு செய்யப்பட்டன. அதிலே மீண்டும் 9 பணிகள் அவார்டு பண்ணாமல் இருந்தன. அது உயர்நீதிமன்றத் தடையின் காரணமாகத் தவிர்க்கப்பட்டு இருந்தது. இப்போது முடிவுற்று கையகப்படுத்துகின்ற நிலையில் இருக்கிறது. அந்த அதிகாரி கையகப்படுத்தி மாநகராட்சிக்குக் கொடுப்பாரேயானால் உடனடியாக இந்தப் பணியைத் துவங்குவதற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி துவங்கப்படும்.

வீரிய விதைகள் விநியோகம்.

*8349—திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மானிய விலையில் அரசு வழங்கும் நெல் உட்பட உணவு தானிய வீரிய விதைகளை அரசு விவசாய (தாலுகா) கிடங்குகளிலிருந்து வழங்க முன்வருமா ?

(ஆ) ஏற்கெனவே உள்ள முறையில் குறைபாடுகளைக் களைய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மானிய விலையில் அரசு வழங்கும் நெல் மற்றும் ஏனைய இடு பொருள்கள் வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் 780 வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் ஏற்கெனவே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. வருங்காலத்திலும் அவ்வாறே தொடர்ந்து செயல்படுத்தப்படும்.